நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண்.99 /2021

அரசு தரப்புக்காக அ. சா.1 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சங்கர் | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on

21st day of July 2025.

*(ஏற்கனவே 09.10.2023 தேதியில் முதல் விசாரணை முடிக்கப்பட்ட சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார். சாட்சியிடம் முதல் விசாரணை வாக்குமூலம் படித்து பார்க்க கொடுக்கப்பட்டது. சாட்சி முழுவதுமாக படித்து பார்த்தார்.)*

(ஆரம்பிக்கப்பட்ட நேரம் 12.56)

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னை போலிசார் விசாரித்தபோது நான் இந்த நீதிமன்றத்தில் 09.10.2023 ஆம் தேதி முதல் விசாரணையில் சொன்ன விவரங்களைத்தான் சொன்னேனா என்று கேட்டால் ஆமாம். நான் மங்கலம்பேட்டை காவல்நிலையத்தில் கொடுத்த புகாரை நான் எழுதினேனா என்றால் இல்லை

எனக்கு எழுத படித்த தெரியாது. யார் எழுதினார்கள் என்று கேட்டால் எனக்கு தெரியாது. எனது மகளும் எதிரியும் காதல் திருமணம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். அவர்கள் திருமணத்திற்கு நானும் எனது மனைவியும் போகவில்லை என்றால் சரிதான். அவர்கள் திருமணத்திற்கு எனக்கு சம்மதம் இல்லததால் நான் போகவில்லை என்றால் சரிதான். எதிரியும் எனது மகளும் அம்பேத்கார் நகர், நெய்வேலியில் தனிக்குடித்தனம் இருந்த விவரம் எனக் தெரியுமா என்றால் நான் அங்கு போகவில்லை. எதிரியும் எனது மகளும் நெய்வேலியில் வசித்து வந்தபோது சந்தோஷமாக தான் இருந்தார்கள் என்று சொன்னால் நான் அங்கு எனது மகளை சென்று பார்க்கவில்லை. எனது மகளுக்கு எதிரியின் அப்பா 5 சென்ட் நிலத்தை எழுதி வைத்தது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எதிரிக்கும் மஞ்சுளா என்பவருக்கும் தொடர்பு ஏற்பட்டதால் எதிரியின் அப்பா எதிரியின் மனைவி என்ற வகையில் எனது மகளுக்கு நிலம் எழுதிவைத்தார். போலிசார் என்னை விசாரிக்கும்போது *"பின்னர் எதிரி அவருடைய பெற்றோர் ஆகியோர் சாமான்கள், பாத்திர வகைகள், வண்டி ஆகியவற்றை வாங்கி தர வேண்டும் என்று என் மகள் சத்தியாவிடம் கேட்டதாக என் மனைவிடம் கூறினார். என் மனைவி அந்த விவரத்தை என்னிடம் கூறினார்"* என்ற விவரத்தை நான் சொன்னேனா என்றால் சொன்னேன். போலிசார் என்னை விசாரித்தபோது "என் மகள் அவர் மாமியார் வீட்டில் பொருட்கள் கேட்டதாக கூறி எங்கள் வீட்டிற்கு வருவார் நாங்கள் சமாதானம் செய்து அனுப்பி வைத்தோம்" என்றும் "21.09.2011 ஆம் தேதி எனது மகளின் பெரியமாமியாரை ஊசி போடுவதற்காக மருத்துவ மனைக்கு அழைத்து வந்தபோது எங்கள் வீட்டிற்கும் வந்தார்" என்ற விவரத்தையும் நான் சொன்னேனா என்றால் சொன்னேன். என்னை ஆர்டிஓ விசாரித்தாரா என்றால் விசாரித்தார். தேதி தெரியுமா என்றால் தெரியவில்லை. எனது மகள் இறந்த பிறகு எத்தனை நாட்கள் கழித்த பிறகு விசாரித்தார் என்றால் 8 அல்லது 9 நாட்கள் கழித்து விசாரித்தார். போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் எனது மகள் இறந்த தினத்தன்று விசாரித்தார்கள். புகார் நான் கொடுக்கவில்லை. எனது மனைவி தான் புகார் கொடுத்தார். எனது புகார் கொடுக்கும்போது நான் உடன் இல்லை. ஆர்டிஓ என்னை விசாரிக்கும்போது நானும் எனது மனைவியும் எனது மகளை இருசக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக சொன்னேனா என்றால் சொல்லவில்லை. எனது மகளுக்கு குழந்தை இல்லை என்றால் சரிதான். எனது

மகள் எங்கள் வீட்டிற்கு கோபித்துக்கொண்டு வரும்போது உனக்கு ஒரு குழந்தை பிறந்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று நான் எனது மகளிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். எனது மகள் தனக்கு குழந்தை இல்லாத வருத்தத்தில் தான் தூக்குமாட்டிக்கொண்டு தற்கொலை செய்து கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. அடித்து கொன்று விட்டார்கள் என்று நான் சொல்கிறேன். எனது மகளை அடித்து கொன்று விட்டார்கள் என்ற விவரத்தை நான் போலிசார் விசாரணையின்போது சொன்னேனா என்றால் சொன்னேன். அடித்து கொன்று விட்டார்கள் என்று நான் யூகத்தின்பேரில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல எதிரி எனது மகளின் இறப்பிற்கு காரணம் இல்லை என்றும் எனது மகளை அடித்துகொன்று விட்டார்கள் என்று நான் சொல்வது முற்றிலும் தவறானது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 01.17)

2025 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 21 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*"என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/–G.Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.